**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.</u>**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ராஜேஷ்கண்ணன் | அசல் வழக்கு எண். | 72/2019 |
| த/பெ. | - | வெங்கடேசன் | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

13.02.2026

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கு A அட்டவணை சொத்தின் ஒரு பகுதி தான் B அட்டவணை சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் பாலகிருஷ்ணன் நாயுடு பெயரிலிருந்து பின்னிட்டு அவரால் கோயிலுக்கு தானம் கொடுக்கப்பட்டது. வழக்கு சொத்து பாலகிருஷ்ணன் நாயுடு என்பவரால் கோயில் பெயரில் தானம் கொடுக்கப்பட்டதா அல்லது அவருடைய மகனான வேணுகோபால் நாயுடு பெயருக்கு தானம் கொடுக்கப்பட்டதா என்றால் கோயில் பெயரில் தானம் கொடுக்கப்பட்டது. வழக்கு சொத்துக்கள் 14.11.1935 தேதியில் வேணுகோபால் நாயுடு என்பவருக்கு தான் தானம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 14.11.1935 தேதியிட்ட தான பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 பத்திரம் தான் அந்த பத்திரம் என்றால் சரிதான்.

2. பி.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்துக்கள் வேணுகோபால் நாயுடு பெயருக்கு தானம் கொடுக்கப்பட்டு அந்த சொத்திலிருந்து வரும் வருமானத்திலிருந்து வரும் ஒரு பகுதியை வேதவிநாயகர் மாரியம்மன் கோயிலின் நெய்வேயத்திற்கு மட்டும் செலவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நேரடியாக வேணுகோபால் நாயுடுவிற்கு கொடுக்கப்பட்டது. பி.சா.ஆ.1 ஆவணம் எழுதிய பிறகு வழக்கு சொத்துக்களை கோயில் நிர்வாகத்தினர் நிர்வகித்து வந்தனரா அல்லது வேணுகோபால் நாயுடு நிர்வகித்து வந்தாரா என்றால் கோயில் நிர்வாகத்தினர் நிர்வகித்து வந்தனர், அதில் அந்த நிர்வாகத்தில்

வேணுகோபால் நாயுடுவும் ஒருவர். வேணுகோபால் நாயுடு வாதியிடம் எந்த வருடத்தில் பரிவர்த்தனை பத்திரம் எழுதி கொண்டார் என்றால் 2000-ம் ஆண்டில் எழுதி கொண்டார், அது தான் வா.சா.ஆ.1 ஆவணம். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டதிலிருந்து தற்போது வரை நானோ, கோயில் நிர்வாகத்தினரோ எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியதே யாருக்கும் தெரியாது, பாலகிருஷ்ணன் நாயுடு குடும்பத்தின் ஆண் வாரிசுகளுக்கே வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி தெரியாது. பாலகிருஷ்ணன் நாயுடு எழுதிய அனைத்து பத்திரத்திலும் அவரது சொத்துக்களை ஆண் வாரிசுகள் தான் அனுபவிக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

3. பாலகிருஷ்ணன் நாயுடுவின் வாரிசுகள் வழக்கு சொத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக தான் வாதியுடன் பரிவர்த்தனை பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிப்பட்ட பின்பு தொடர்ந்து கோயிலுக்கு செய்ய வேண்டிய நற்காரியங்களை செய்து கொண்டு தான் வந்தனர் என்றால் சரிதான். பரிவர்த்தனை செய்யப்பட்ட பின்பு புதியதாக கிடைத்த சொத்தை வைத்து தான் பாலகிருஷ்ணநாயுடுவின் குடும்பத்தினர் கோயில் நற்காரியங்களை செய்து வந்தனர் என்றால் சரியல்ல. எந்த சொத்தின் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து பாலகிருஷ்ணநாயுடு குடும்பத்தினர் தற்போது வரை கோயில் நற்காரியங்களை செய்து வருகின்றனர் என்றால் ஆகாசம்பட்டு கிராமத்தில் உள்ள ஓம் சக்தி ஆலோ பிளாக்ஸ் நிறுவனம் இருக்கும் இடத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து பராமரிக்கின்றனர். ஆகாசம்பட்டு கிராமத்தில் உள்ள ஓம் சக்தி ஆலோ பிளாக்ஸ் நிறுவனம் இருக்கும் இடத்தின் உரிமையாளர் யார் என்றால் பாலகிருஷ்ணநாயுடு வாரிசுகள்.

4. வழக்கு B அட்டவணை சொத்தானது பொது வழி என்று என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். B அட்டவணை சொத்தானது பொது வழி என்று நிரூபிக்கும் வகையில் வருவாய்துறை ஆவணமான புல வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் புல வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல வரைபடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் தான் உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். தாவா B அட்டவணை சொத்தானது வாதிக்கு பாத்தியமான இடம் என்றும்

எந்த காலத்திலும் பொதுவழியாக யாராலும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. பொது வழி என்று சொல்லப்படும் வழக்கு B அட்டவணை சொத்தை நான் கேட் போட்டு அடைத்துள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக வாதி என் மீது வானூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் போட்ட கேட்டை எடுக்க சொல்லி அதன் பேரில் நான் கேட்டை எடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துவிட்டு வந்தேன் என்றால் சரியல்ல, காவல்நிலையத்தில் அவ்வாறு சொல்லவில்லை. வாதியிடம் உள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக வாதிக்கு பாத்தியப்பட்ட B அட்டவணை சொத்தில் நான் கேட் போட்டு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வழக்கு B அட்டவணை சொத்தில் எனக்கு தனிப்பட்ட உரிமை உள்ளதா என்றால் இல்லை. பாலகிருஷ்ண நாயுடு மற்றும் வாதி ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.1 பரிவர்த்தனை பத்திரத்தின் படி வழக்கு சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்துக்களை வாதி அனுபவிப்பதற்கு நான் இடைஞ்சல் செய்யவோ, உரிமை கோரவோ எந்த சட்ட தகுதியும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தை பாதுகாப்பதற்கு என்னுடைய சொத்தை சுற்றி தான் வேலி அமைக்க முடியும் என்றும் மற்றவர்களுக்கு பாத்தியமான சொத்துக்களை சுற்றி வேலி அமைக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.13 22:13:39 +0530

District Munsif
Vanur.